நம்பிக்கை ஓம்சாய்ராம் பொறுமை

# ஸ்ரீ ஸ்ரீ சீரடி சாயிபாபாவின் அற்புத லீலைகள்

## ( பக்தர்களின் அனுபவங்கள் )



ஸ்ரீ ஸ்ரீ சீரடி சாயிபாபா அறக்கட்டளை

58, M.K. மூப்பனார் ரோடு, தஞ்சாவூர் - 1.
தமிழ்நாடு.
போன் : 04362 - 223122
web : thanjaisai.com

தஞ்சை ஸ்ரீ ஸ்ரீ சீரடி சாயிபாபாவின் அறக்கட்டளை வெளியீடு

பகுதி - 2 2.10.2014

ஓம் சாய்ராம்

நம்பிக்கை

பொறுமை

# ஸ்ரீ ஸ்ரீ சீரடி சாய்பாபாவின் அற்புத லீலைகள்

## (பக்தர்களின் அனுபவங்கள்)



ஸ்ரீ ஸ்ரீ சீரடி சாயிபாபா அறக்கட்டளை
58, M.K. மூப்பனார் ரோடு, தஞ்சாவூர்-1. தமிழ்நாடு
போன்: 04362-223122 Web: thanjaisai.com

**உங்கள் கவனத்திற்கு!!!**

வாழ்க்கை என்ற தேருக்கு உள்ள இரு சக்கரங்கள், நம்பிக்கையும், பொறுமையும் ஆகும், என்பது சீரடி சாயி நாதனின் அமுதவாக்கு "Faith can do wonders" என்பது தாரக மந்திரம். நம்பிக்கை பல அற்புதங்களைத் தோற்றுவிக்கும். நம்பிக்கை குறைகின்ற போதே, கவலைகள், துன்பங்கள் தோன்றுகின்றன.

சீரடி சாயி நாதனிடம் நம்பிக்கை வைத்துப் பொறுமையோடு வாழ்ந்து வருகின்ற சாயி அன்பர்களின் அருள் அனுபவங்ளை இந்நூல் தாங்கி வருகின்றது. இந்நூலின் உட்பொருள். சீரடி பாபா அவர்கள் தம் அறிவுரைகளை, பக்தர்களின் வாழ்க்கையில் நடத்திய அற்புதங்களாகும்.

அவருடைய வாழ்வியலைக் குறிக்கும் ஶ்ரீ சாயி சத் சரித்திரம் என்னும் நூலில் பாபாவின் அறிவுரைகள் பக்தர்களின் அனுபவங்களாக வெளிவந்துள்ளன. அவருடைய வாழ்வியலுள், ஶ்ரீ சீரடி சாய் நாதனின் உறுதி மொழிகள் சிலவற்றைத் தொகுக்க முற்படுகின்றேன்.

ஶ்ரீ சீரடி நாதனின் வரலாறு, ஆழ்ந்த எல்லையற்ற ஒரு பெருங்கடல். ஆனால் எளிமையானது, தெளிவானது.

: என் பணி ஆசிகள் வழங்குவதாகும்.

: என்னருகில் அமைதியாய் இரு மற்றவற்றை நான் பார்த்துக் கொள்கிறேன்.

: என் பக்தர்களுக்குத் தீங்கு நேர்வதை நான் பார்த்துக் கொண்டு இருக்கமாட்டேன்.

: என் பக்தன் நிலைதடுமாறி விழும்போது நான் என் கைகளை நீட்டித் தாங்கி அவனைப் பிடித்திடுவேன்.

: என் விருப்பத்திற்கு இணங்கியே பக்தர்களை என்னிடம் வருவிக்கிறேன்.

: பிரிவுச் சுவற்றை இடித்துத்தள்ளுங்கள்.

: பொறுமை இலட்சியத்தை நிறைவேறச் செய்யும்.

: கோபப்படுவோர் என்னைக் காயப்படுத்துகின்றார்.

: நான் கடவுளின் ஓர் அடிமை.

: பக்தியே எனக்குப் பிடித்தமானது.

: அனைத்தும் இறைவன் செயலாகக் கருத கர்மம் விடுபடும்.

: பிறர் கூறும் கடுஞ்சொற்கள் உன் உடலைத் துளைக்கப் போவதில்லை - தள்ளிவிடு.

: பகையையும், பூசலையும் தவிர்த்திடு கடவுள் உன்னைக் காப்பார்.

: யாரையும் பழிவாங்க நினைக்காதே.

: அவதூறு பேசாதே.

: இறுதிவரை உன்னுடன் வரும் நட்பைத் தேர்ந்தெடு.

: கடவுள் அனுமதித்தால்தான் நான் செயல்படுவேன்.

:அகங்காரம் இல்லாத உள்ளத்தில் நான் விரும்பி குடியேறி ஆட்சிசெய்வேன்.

: என் அடியவர்களின் உள்ளங்களில் என் வாழ்வியல் நிகழ்ச்சிகளும், அறிவுரைகளும் நம்பிக்கை ஊட்டும்.

: மற்றவர்களின் கருத்தை மறுக்க முயற்சிப்பதும், உன் கருத்தை நிலைநாட்ட முயற்சிப்பதும், விவாதத்தை ஏற்படுத்தும். விவாதத்தைத் தவிர்த்துவிடு.

: பூரண சரணாகதியை விசுவாசத்தோடு எவன் என்னைத் தியானிக்கின்றானோ அவர்களைச் சாவின் வாயிலிலிருந்து நான் வெளியே இழுத்து விடுவேன்.

:பேறுபெற்ற அதிர்ஷ்டசாலிகளும், பாவம் செய்யாதவர்களுமே என்னுடைய வழிபாட்டை மேற்கொள்ள முடியும்.

: பக்தியின் கூறுபாடுகளை ஆராய வேண்டாம். எங்கு பக்தி இருக்கிறதோ, அங்கு நான் அமர்கின்றேன்.

: ஏதேனும் உறவோ, தொடர்போ இன்றி ஒருவரும் எங்கும் செல்லுவதில்லை. உங்களிடம் வரும், ஜீவராசிகளையோ, மனிதர்களையோ விரட்டிவிடாமல் மரியாதையோடு நடத்துங்கள் ஸ்ரீ ஹரி மகிழ்வார்.

: விருப்பு வெறுப்புகளைப் பொறுமையோடு சகித்துக் கொள்ளுங்கள். எதிலும் கோபம் கொள்ளாதீர்கள் கோபமே பாவம்.

: பசியோடு இருப்பதோ, மிகுதியாக உணவு உண்பதோ கூடாது.

: பெறுவதற்குச் சிறந்த வழி கொடுத்தலேயாகும்.

: என் வாழ்க்கை வரலாற்றைக் கேட்டால் எல்லா நோய்களும் அகலும், மகிழ்ச்சி தோன்றும்.

: சாயி, சாயி என்று சாதாரணமாக ஞாபகமூட்டிக் கொண்டால் பாவங்கள் விலகும்.

: எல்லோரிடமும் பணிவாகவும், அடக்கமாகவும் இருந்து உள்ளத்தாலும், உயிராலும் என்னை வணங்கினால் பேரின்பம் கிட்டும்.

: நீங்கள் செய்வது அனைத்தும் எனக்குத் தெரியும் என்பக்கத்தில் கவனம் வைத்திருப்பவனைத் துன்பம் நெருங்காது. இவ்வுலகமே என் உடம்பு.

: வறுமையோ, இல்லாமையோ என் அடியவர் வீட்டில் இருக்காது.

: என் அடியவர்களைக் கவனிப்பதே என் சிறப்பியல்பு.

:பிறர் உங்களுக்குத் தீமை செய்தால் அதற்காகப் பழிவாங்காதீர்கள். இயலுமாயின் பிறருக்குச் சிறிது நன்மையைச் செய்யுங்கள்.

சீரடி சாயி நாதனின் அறிவுரைகளே பக்தர்களின் அனுபவங்களாக மலரும் ஆற்றல் பெற்றன. பல உருவங்களில், பல வடிவங்களில், உயிருள்ள, உயிரற்ற வடிவங்களாகவும் வெளிப்பட்டுப் பக்தர்களுக்கு அருள் புரிந்த

லீலைகள் ஆயிரம் உண்டு. அவற்றிற்குரிய அகச்சான்றுகள் சிலவற்றை மட்டும் தொகுத்துக் கொடுத்துள்ளோம். தொட்டது கொஞ்சம், தொடாதது ஏராளம். இதைப் படிப்போர்க்குச் சீரடி சாயிபாபா மீது நம்பிக்கையும், அவரை வழிபட தேவையான பொறுமையும் கிட்ட வேண்டும் என்பது எங்களது நோக்கமாகும்.

: அறியாமையை அழிப்பதே ஞானம்

: எல்லா உயிர்களிடத்தும் என்னைக் காணுங்கள். என்னுடன் ஒன்றுவதற்கு இதுவே வழி.

: என்னையே நினைப்பவனுக்குக் கடன்பட்டவனாக நானிருக்கின்றேன். அவனுக்கு விடுதலை தந்து என் கடனைக் கழிப்பேன்.

: ஏதாவது ஒரு ரூபத்தில் என் அடியவரைத் தொடர்ந்து கொண்டிருப்பேன்.

சாயி, சாயி என்று உச்சரித்தாலே எல்லாப் பாவங்களும் நசித்துப் போகும் என்று கூறிய சீரடி சாயி பாபாவின் சொற்கள் பக்தர்களின் வாழ்வில் அனுபவங்களாகவும், அற்புதங்களாகவும் விளைந்துள்ளன.

என் பக்தர்களைத் தவறும்படி விடமாட்டேன். அவர்களைப் பற்றியே நினைத்திருப்பேன் என்பது சாய்பாபாவின் அமுதவாக்கு.

நான் பட்டினி இருந்ததில்லை. மற்றவர்களையும் பட்டினி இருக்க அனுமதிப்பதில்லை.

பக்தியுடன் உன்னுடைய கைகளை என்முன் விரித்தால் நான் எப்பொழுதும் உன்னுடனே இருப்பேன்.

பெறுவதற்குச் சிறந்த வழி கொடுத்தலேயாகும்.
என்னுடைய பக்தனுக்கு நான் அடிமை.

என்னைச் சரணடைந்தவர்க்கு நான் கடனாளி ஆகின்றேன்.

சீரடி சாயி நாதனின்
பொற்பாதங்களைப்
பற்றுவோம்...

**ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சாயி அறக்கட்டளையினர்**
தஞ்சாவூர்
25.8.2014

கலியுக கண்கண்ட தெய்வமான ஸ்ரீ ஸ்ரீ சீரடி நாதனின் அமுத மொழிகள் உறுதியானவை. தவம் என்ற பெயரில், உடலைத் தொல்லைபடுத்த சீரடி பாபா அவர்கள் ஒரு போதும் உபதேசம் செய்ததில்லை. மசூதியில் இருந்து கொண்டு ராம நவமி விழா எடுத்தவர். சாயி, சாயி என்று எப்போதும் இன் நா ஒலிக்கட்டும் அதுவே சிறந்த சாதனை என்று கூறியவர். சர்வ வியாபியான சீரடி சாய் பாபாவின் பொன்மொழிகளைத் தொகுத்து, நுட்பமாகப் பார்த்தால், கிடைக்கும் ஒரேபதில், அவர் வாய்மொழி வாயிலாகவே காண்போம்.

மாதவராவ் தேஷ் பாண்டே என்ற தம் அன்பரிடம்,

"என்னுடைய நாமத்தை எவன் சொல்கிறானோ அவனுடைய தேவைகளைப் பூர்த்தி செய்கின்றேன். அவன் பக்தியை வளர்க்கின்றேன். என்னுடைய நாமாவளியைப் பாடினால் அவனுடன் ஐக்கியமாகின்றேன். இம்மாதிரியான பக்தர்கள் என்னுடைய கதையைக் கேட்டமாத்திரத்தில் மகிழ்ச்சியில் திளைப்பார்கள். நான் சொல்வதை நம்பு. என் லீலைகளைப் பாடுகிறவனுக்கு முழு திருப்தியையும், அளவில்லா மகிழ்ச்சியையும் தருகின்றேன்.

என்னைச் சதா நினைக்கின்றவனுக்கு அழியும் வஸ்துக்கள் மீது பற்றுவராது. என்கதைகளைக் கேட்டமாத்திரத்தில் வியாதிகள் பறந்துவிடும். அதனால் என்கதைகளை வணக்கத்துடன் கவனி அதையே நினைத்து ஆசையோடு கர்வம் தலை காக்காது. சாந்தி கிட்டும்.

1980 ஆம் ஆண்டு புரட்டாசி மாதம், சீரடி பாபாவின் மகா சமாதி தினத்திற்காக, அன்பர்கள் பலர்சேர்ந்து, ஆலயத்திற்கு, வெள்ளை அடிப்பது வழக்கம். அப்பணியில், கோயிலின் உள்ளே சீரடி சாய் சிலைக்கு மேலுள்ள ரூம் பகுதியில் வெள்ளை அடித்துக் கொண்டிருக்கும் போது கைவழுக்கிவிட்டது. கீழே, தொங்கும் குத்து விளக்கு ஒருபுறம், ஏணிமரம் ஒருபுறம், நடுவே சீரடி பாபாவின் பளிங்குச்சிலை விழுந்தால், சிலைமேல் விழுந்திருத்தல் வேண்டும், இல்லையெனில் எரியும் விளக்கில் விழுந்திருத்தல் வேண்டும், இல்லை எனில் சாய்த்து வைத்திருக்கும், ஏணி மரத்தில் விழுந்திருத்தல் வேண்டும். என் உயரமோ 5 அடிக்கு மேலிருக்கும். சிலையைச் சுற்றி இரண்டடி மட்டுமே இடைவெளி, நடந்தது என்ன, இன்றுவரை என் அறிவிற்கு எட்டாத அதிசயம். கீழே விழுந்தவன் குறுக்காக வந்து, இரண்டடி இடைவெளியில் வந்து நின்றேன். பிறகு சீரடி பாபாவின் சரித்திரம் படிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. எனக்கு நடந்த இந்தச் செயலுக்குத் தகுந்தார் போல் சீரடி சாயி அவர்களின் அறிவுரைகளில் ஒன்று

"என் காரியமாக யார் கீழே விழுந்தாலும் நான் தாங்குவேன்" என்பதாகும். அதுதான் என் வாழ்விலும் நடந்தது.

சீரடி சாயி நாதனின் பொன்னடிகளுக்குக் கோடி வணக்கங்கள்.

ஒப்பம்

**இரா.குருநாதன்**

தஞ்சாவூர்.

# தஞ்சை சீரடி சாய்பாபா கோயில்

நான் சீரடி சாய் பாபாவை அறிந்ததே ஓர் அற்புதமான செயலாகும். 2006ம் ஆண்டு வரை சாய் பாபாவை நான் அறியவில்லை. வேலை தேடி நான் சென்ற போது கோவிலுக்குச் செல்லும் வழி என்ற போர்டைப் பார்த்துச் சென்றேன். நான் பாபாவைப் பார்த்த பின் என் மனதில் என்னையும் அறியாமல் ஓர் அமைதி நிலவியது. நான் பிரதோச வழிபாட்டுக்காகப் பலமுறை கோவிலுக்குச் சென்றதால் எனது பர்சில் விபூதி குங்குமம் நிறைய இருந்தது. அதைச் சுத்தம் செய்யும் போது நான் எனது சாய்பாபாவின் மிகச் சிறிய புகைப்படத்தை அதனுள் பார்த்தேன். அதை யார் கொடுத்தார்கள்? என்பதும் தெரியவில்லை. அவரை வெளியே வைக்க மனமில்லாமல் நானே வைத்துக் கொண்டேன். 2002ம் ஆண்டு என்னைத் தேடி வந்த பாபாவை 2006ம் ஆண்டு தான் நான் தெரிந்து கொண்டேன். அதன் பிறகு சத்சரிதம் படிக்கத் தொடங்கினேன். அத்தியாயம் 5ல் பாபா நீரை ஊற்றி விளக்குகள் ஏற்றினார் என்று இருந்தது. இச்செய்தி என் மனதில் ஆழமாகப் பதிந்து இருந்தது. அதுவரை என் நினைவில் வராத இந்த நிகழ்வு சத்சரிதம் படித்த பிறகு என் மனக் கண்முன் பலமுறை வந்து செல்கிறது.

அத்தியாயம் 18.19-ல் திருமதி ராதாபாய் தேஷ் முக்கதை. பாபா ஹேமத் பத்தின் கைகளில் கற்கண்டைத் திணித்து இக்கதையை உங்கள் உள்ளத்தில் இருத்தி நன்றாக

நினைவில் வைத்துக் கொள்வீர்களேயானால் தங்களது நிலையும் கற்கண்டை போலவே சுவையுள்ளதாகும். உங்களது எல்லா விருப்பங்களும் நிறைவேற்றப்படும். நீங்களும் சந்தோஷமாய் இருப்பீர்கள் என்று கூறுவார். இதைப் படித்துக் கொண்டு இருக்கும் போது எங்கள் கீழ்வீட்டுப் பெண்மணி ஒரு கிண்ணம் நிறைய கற்கண்டை என்னிடம் கொடுத்து விட்டுச் சென்றார். அன்று நான் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. பாபா என்னை நம்பிக்கையுடனும் பொறுமையுடன் இருந்தால் உன் வாழ்க்கை கற்கண்டை போல இனிக்கும் என்று கூறுகிறார் என நினைத்துக் கொண்டேன்.

என் திருமண வாழ்வில் பல்வேறு பிரச்சனைகள் இருந்தது. நான் என் கணவர் வீட்டை விட்டு 4 வருடம் தனியாக இருந்தேன். என் தாய் மார்கழி மாதத்தில் தினமும் காலை 5 மணி பூசைக்குக் கோவிலுக்குச் சென்று வருவார். ஒரு நாள் எங்கள் பக்கத்து வீட்டுப் பெண்மணி என் தாயிடம் நீங்கள் பல கோவிலுக்குச் சென்று வருகிறீர்கள் ஆனால் உங்கள் மகள் வாழாமல் தனியாக உள்ளார். கடவுளைக் கும்பிட்டு என்ன பயன்? என்று கூறினார். அவர்கள் சென்ற பின் என் தாய் என்னிடம் எல்லோரும் உன்னைத் தவறாகப் பேசுகிறார்கள். எனக்காக உன் கணவர் வரவேண்டும் என்று வேண்டிக் கொள் என்றார்.

நான் சீரடி சாய்பாபாவிடம் வந்து என்ன செய்வீர்களோ தெரியாது பொங்களுக்குள் என் கணவர் என்னைத் தேடி

வரவேண்டும் அது உங்கள் பொறுப்பு என்று கூறிவிட்டு வந்து விட்டேன். என் கணவர் எங்கு இருக்கிறார் என்பதே அப்போது எனக்குத் தெரியாது. எனது கணவரின் உறவினர்கள் நான் வேறு ஒருவரைத் திருமணம் செய்து கொண்டேன் என்று கூறி வந்தனர். போகி அன்று என் கணவர் எனக்குப் போன் செய்து நீ பொங்கலுக்கு வீட்டிற்கு வரவேண்டும் என்று கூறினார். இது போன்ற அற்புதத்தை நமது சீரடி சாய்பாபாவைத் தவிர வேறு எவரால் செய்ய இயலும்!!

**J. ஜெயஸ்ரீ**
4/6 தேவோஜிராவ்தெரு
அய்யன்குளம்
தஞ்சை – 1.

✡✡✡✡✡

நான் தஞ்சாவூர் மேலவீதியில் வசித்து வருகிறேன். நான் கடந்த 12 வருடங்களாக ஒரு கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றி வருகின்ற வேளையில் எனக்கு வேலையில் சிறு பிரச்சனைகள் ஏற்பட்டு என்னுடைய வேலை பாதியில் நின்றுவிட்டது. நான் மிகவும் மனவேதனை அடைந்த போது எனது தாயார் நீ சாய்பாபா கோவிலுக்குச் சென்று 3 வாரங்கள் பிரார்த்தனை செய் என்று கூறினார்கள். நானும் 1 வாரம் வியாழக்கிழமை அன்று வந்து பிரார்த்தனை செய்தேன். அடுத்த வாரமே எனக்கு ஒரு கம்பெனியில் வேலை கிடைத்தது. அந்த வேலை எனக்கு முன்பு இருந்ததை விட திருப்திகரமாக உள்ளது. அந்த நாள் முதல் நான்

சாய்பாபா கோயிலுக்கு வருவதை வழக்கமாகக் கொண்டுள்ளேன். இப்பொழுதும் நான் சாய்பாபாவிடம் எங்களுக்குக் குழந்தை பாக்கியம் வேண்டி இலவச பிராத்தனையில் வந்து கலந்து கொண்டு சென்றுள்ளேன். கண்டிப்பாகப் பாபா எங்களுக்கு அருள்புரிவார் என்ற நம்பிக்கையில் வாழ்கின்றேன்.

நன்றி வணக்கம்

இப்படிக்கு
**லெ. பாஸ்கர்**
168/1222 மேலவீதி
தஞ்சாவூர்.

✡✡✡✡✡

ஸ்ரீ சாய் நாதர்க்கு ஜெய்!

என் பெயர் நர்மதா நான் ரொம்ப காலமாகத் திருமணம் ஆகாமல் இருந்தேன். சாய்பாபா கோயிலுக்கு வந்து முறைப்படி விரதம் இருந்து நம்பிக்கையுடனும் பொறுமையுடனும் சாய் நாமத்தைச் சொல்லிக் கொண்டே இருப்பேன். சாய்பாபா என் வேண்டுதலைக் கேட்டு எனக்குத் திருமண வாழ்க்கையைத் தந்தார். நான் இந்து, மணமகன் கிருத்துவர். சாய்பாபாவுக்கு ஜாதி, மதம் ஏழை பணக்காரர் என்ற பேதம் கிடையாது.

இந்த வரன் கடவுள் சாய்பாபா கொடுத்தது நான் மனபூர்வமாக ஏற்றுக் கொண்டேன். என் திருமணம் 23 November 2011-ல் நடைபெற்றது. சாய்பாபாவின்

அருளோடு எந்தவித தடையுமின்றி மணவிழா நடைபெற வேண்டும் என்று வேண்டுகிறேன்.

பணம் காசு கிடைக்காத வேளையில் உதவினார். பெண்ணாகப் பிறந்ததற்கு நல்ல வழி கொடுத்தார். நம்பிக்கையுடன் இருந்தேன் வரன் கிடைத்தது. இதைபோல் எனக்கு ஒரு பையன் பிறப்பான் என்று நம்பிக்கையுடன் இருக்கிறேன். சாய்பாபாவின் அருள் எனக்கு என்றும் கிடைக்கும்.

இப்படிக்கு

**நர்மதா**

✡✡✡✡✡

என் பெயர் பாரதி. நான் இரண்டு முறை காவல்துறைத் தேர்வில் தோல்வி அடைந்து மூன்றாவது முறை பாபாவிடம் வேண்டிக் கொண்டு தேர்வில் கலந்து கொண்டேன். பிறகு எனக்குத் தேர்வில் வெற்றி கிடைத்து பணி நியமன கடிதம் வந்தது. என் வேண்டுதல்களை நிறைவேற்றிய பாபாவிற்குக் கோடான கோடி நன்றிகள்.

இப்படிக்கு

**ந. பாரதி**

ஜெபமாலைபுரம் புதுதெரு

P.R. நகர், களிமேடு (P.O)

தஞ்சாவூர்.

ஓம் சாய்ராம்

என்னுடைய கணவர் வெளிநாட்டில் (குவைத்) இருந்தபோது அங்கு ஒருவர் மூலம் சீரடி பாபாவின் பெருமைகள் பற்றி அறிந்து அங்கு உள்ள பஜனைகளில் கலந்து கொள்வார். ஊருக்கு வந்தபோது சாய்பாபா படம், சிலை வைத்து வியாழன் தோறும் விரதமிருப்பார். எனக்கு இதில் அவ்வளவு ஈடுபாடு இல்லை என்றாலும் அவரது பூஜைக்கு உதவி செய்தேன். சிவன் ஒருவரை வணங்கினால் போதும் என்பது என் எண்ணம். எனது தந்தையார் 55 வருடங்களாகச் சபரிமலை சென்று வருபவர். நானும் சிறு வயதில் 2 முறை சென்றுள்ளேன். 2004ம் வருடம் நான் கர்ப்பமானேன். அவர் 3 மாதத்தில் குவைத்துக்குச் சென்றுவிட்டார். எங்களுக்கு 4 வயதில் ஒரு ஆண் குழந்தை (கோகுலகிருஷ்ணன்) உள்ளது. அவர் நமக்கு எந்தக் குழந்தை பிறந்தாலும் சரி என்ன பெயர் வைத்தாலும் அதற்கு முன் சாய் என்று சேர்த்து அழைக்க வேண்டும் என்றார். அவர் ஊர் சென்ற பிறகு மிகவும் மனக்கஷ்டம் சாப்பாடு கூட சரிவர இல்லாமல் நானும் என் வயிற்றிலிருக்கும் சிசுவும் பட்ட கஷ்டம் அந்த சாய் அறிவார். அரிசி எப்படி வாங்குவது இவ்வளவு சாப்பிட்டால் உன் புருஷனா பணம் அனுப்புறான் என்று திட்டுவார்கள். அப்போது அவரும் அங்குச் சீட்டுக் கட்டி ஏமாந்து வட்டிக்கு வாங்கிக் கடனாளியாக இருந்தார் அதனால் அவரால் பணம் அனுப்ப இயலவில்லை.

2004 டிசம்பர் 21ம் தேதி பெண் குழந்தை பிறந்தது. குழந்தைக்குச் சாய்துர்க்கா என்று பெயரிட்டோம். அப்போது

என் மாமியார் என்னை வந்து பார்த்த போது குழந்தை உபயோகத்திற்குப் புடவை ஒன்று தந்தார். அதில் பாதி குழந்தைக்கு மெத்தை போலவும் மீதியைக் கிழித்தும் பயன்படுத்தினோம். அந்த புடவை 2 மாதத்திற்கு முன் தீபாவளிக்கு வாங்கியது. 2 நாள் கழித்து எனக்க ஜுரம் வந்து சரியாகிவிட்டது. பிறகு 15 நாளில் இரவு சரியாக 12 மணிக்கு இரத்தபோக்கு ஏற்பட்டது. அடுத்த 15 நிமிடத்தில் நான் சுயநினைவு இழந்து விட்டேன். பிறகு 2 பாட்டில் இரத்தம் ஏற்றி உடம்பு சரியானது பிறகு 10 நாளில் திரும்ப அப்படி ஆனது. ஸ்கேன் செய்தும் எதுவும் தெரியவில்லை ஏன் இப்படி ஆகிறது என்றும் தெரியவில்லை பல டெஸ்ட் செய்தும் எல்லா ரிசல்ட்டுமே நார்மல் என்றுதான் வந்தது. மருத்துவம் பார்க்க மயிலாடுதுறை, மன்னார்குடி, தஞ்சாவூர் சென்றும் என்ன காரணம் என்றே தெரியவில்லை. காரணம் தெரிந்தால் தானே வைத்தியம் செய்யமுடியும்? கையில் ஒரு மாத குழந்தை வேறு கடைசியாக வேலூர் சி.எம்.சி ஹாஸ்பிடல் சென்று பிறகு 3 மணி நேரம் ஸ்கேன் செய்து கண்டுபிடித்தார்கள். உடனே ஆப்ரேஷன் செய்ய பணம் 40 ஆயிரம் செலவாகும் என்றார்கள். அன்று இரவே நான் ஒரு கனவு கண்டேன்.

ஒரு கருவமரக் காட்டு இடையில் நானும் என் அம்மாவும் சென்று ஒரு கோயிலுக்குச் செல்கிறோம் கையில் பால்குடம் வைத்திருக்கிறேன். உள்ளே பெரிய மேடையில் சாய்பாபா சிலை அங்கு அபிஷேகம் செய்ய உட்கார்ந்திருக்கிறேன். அப்பவும் என் அம்மாகிட்ட எனக்கு

சாய்பாபா மேல் எல்லாம் நம்பிக்கையில்லை அவர் போன் செய்து சொன்னதனால் வந்தேன் என்கிறேன். பிறகு அபிஷேகம் செய்துவிட்டு திரும்ப கருவமரக் காட்டு இடையில் ஒற்றையடி வழியாக நடந்து வருகிறோம் யாரோ கூப்பிடுவது போல் தெரிந்து திரும்புகிறோம் அங்குப் புட்டபர்த்தி பாபா எங்களை நோக்கி வருகிறார். நீ குழந்தைக்கு வைத்திருக்கும் இந்த (என் மாமியார் கொடுத்த) துணியைத் தூக்கி எறிந்துவிடு என்கிறார். நாங்கள் ஏன் என்று கேட்டுக் கொண்டிருக்கும் போது தூரத்தில் என் மாமியாரும் நாத்தனாரும் வருகிறார்கள். திரும்பி பார்க்கும் போது புட்டபர்த்தி பாபாவைக் காணவில்லை.

நான் இந்த கனவை என் அம்மாவிடம் சொன்னேன். அம்மாவும் நம்புகிறாயோ இல்லையோ இந்த துணியைத் தூக்கிப் போட்டுவிடுவோம் என்று முடிவெடுத்தோம். பிறகு இரவு 12 மணிக்கு ஆரம்பித்த ஆப்ரேஷன் விடியற்காலை 5.30 மணிக்கு நல்லவிதமாக முடிந்து வீடு திரும்பிய பிறகும் நான் பட்ட கஷ்டத்திற்கு அளவில்லை. கைகுழந்தைக்கு வெந்நீர் கூட வைத்து கொடுத்தால் பேசுவார்கள் என்று 3 மாதத்தில் பச்சைத்தண்ணீரில் குளிக்க வைத்தேன். திட உணவு செரலாக் வாங்க முடியாமல் சாதத்தில் உப்புபோட்டு, ஜீனி போட்டு மிக்ஸியில் அடித்து குழைவாகக் கொடுத்தேன். பக்கத்து வீட்டு அக்கா வீட்டில் கோழி வளர்த்தார்கள். பாப்பாவுக்கு அரைவேக்காட்டில் உப்பு, மிளகு போட்டு கொடு என்று யாருக்கும் தெரியாமல் முட்டை தருவார்கள். 8 மாதத்தில் எனக்கு உடல் முழுக்க அம்மை ஐப்பசி மாதம்

போட்டது. 17 நாள் நரக வேதனைபட்டேன். பாப்பாவையும் தொடக்கூடாது என்று சொல்லிவிட்டார்கள். அப்போதுதான் என் போனில் அம்மா கேட்டார்கள் அந்த துணியைத் தூக்கி எறியவில்லையா? என்று உடனே அன்றுதான் தூக்கி எறிந்தேன்.

பிறகு அம்மா வீட்டுக்கருகில் ஒருவீடு பார்த்துக்கொண்டு தனியாக வந்து ஒரு கம்பெனியில் வேலை பார்த்தேன். தனியாக வீடு பார்த்து 10 நாட்களிலே வேலைக்குக் கிளம்பிக் கொண்டிருக்கும் போது ஒரு வயதானவர் என் கணவர் வைத்து கும்பிட்டது போலவே ஒரு சாயிசிலையை ஒரு வியாழக்கிழமை காலை 7 மணிக்கு என்னைக் கூப்பிட்டுக் கொடுத்து நீங்க ரூ.80 பணத்தைக் கொடுங்க என்று சொன்னார் என்னிடம் ரூ.70 தான் இருக்கு என்று கொடுத்தேன்.

அன்றிலிருந்து பூஜை செய்து கொண்டிருந்தேன். அப்போது என் தங்கை தஞ்சாவூரில் இருந்தாள் அவர்கள் வீட்டுக்குச் சென்றேன். பிறகு சாயந்திரம் அருகில் ஒரு பாபா கோவில் இருக்கு அங்கு செல்வோம் என்றாள். நான் பாபா கோவிலே பார்த்ததில்லை. சீரடியில் மட்டும் தான் கோவில் இருப்பதாக நினைத்தேன். அங்குச் செல்லும் போதே நான் கனவில் கண்ட அந்த கருவமரக்காட்டிடையில் அதே கோவில் முகப்பு அதே மேடையில் பாபா உருவம் எனக்கு உச்சிமுதல் பாதம் வரை சிலிர்த்து விட்டது. வேறு யாராவது இந்நிகழ்ச்சியைச் சொன்னால் கூட இது உன் நினைப்பு

என்பேன். நானும் தஞ்சாவூருக்கு 3 வது முறையாக வந்திருக்கிறேன். அன்று முதல் நான் பாபாவின் பாதங்களில் சரணாகதி அடைந்தேன்.

எனக்குப் பாபாவின் அருள் கிடைத்தபிறகு என் வாழ்வில் முன்னேற்றம் தான். முதலில் பாபா எனக்கு உலகில் வாழ்வதற்கு தைரியம் தந்தார். இப்போது நான் என் மாமியார் வீட்டிற்கே வந்து தனியாக என் கணவர் உதவியுடன் ஒரு கம்யூட்டர் சென்டர் வைத்து 4 வருடமாக நல்லவிதமாக ஊரில் மதிப்பும் மரியாதையுடனும் இருக்கிறோம். எங்கள் கடனும் ஓரளவு அடைந்து விட்டது. என் கணவரும் ஊரிலிருந்து வந்து ஸ்ரீசாய் சைக்கிள் பாதுகாப்பகம், ஸ்ரீ சாய் கூல்டிரிங்ஸ் என கடை ஆரம்பித்து நடத்தி வருகிறார். எல்லாம் வல்ல சாய் அருள் எங்களுக்குப் பரிபூரணமாக இருக்கிறது.

ஓம் சாய் ராம்!!!

✡✡✡✡✡

13.3.2009

ஜெய் சாய் ராம்

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

எனது சொந்த ஊர் திருநெல்வேலி. நான் மில்லில் வேலை பார்த்து வந்தேன். பின்னர் அவ்வேலையை ராஜினாமா செய்துவிட்டேன். அதன் பின் சில வருடங்களாகச் சுய தொழில் செய்து வருகிறேன். அதில் நீரோட்டம் பார்ப்பதும் ஒன்று. போன வருடம் வரை அதாவது 2007 வரை என் தொழிலில் சுமாராகவே இருந்தது. 2008-ல் சித்திரை மாதப் பிறப்பன்று இங்கு உள்ள சீரடிக்கோயில் வந்து கும்பிட்டு வழிபட்டுச் சென்றபின் என் வாழ்க்கையிலும், தொழிலிலும் குறிப்பிடத்தக்க நல்ல முன்னேற்றம் கண்டது. அது பகவான் சீரடி சாய்பாபா அருள் என்று என் உள்மனதில் ஆழமாக தெளிவாகத் தெரிவித்தது.

**S. செல்லப்பா,** M.A.,D.Co-op.,
நீரோட்ட நிபுணர்,
வீடு, வயல், புது வீடு கட்ட காலிமனை
போர் போட நீரோட்டம் பார்க்கப்படும்.
129, தெற்குராஜ வீதி,
சங்கரன்கோவில்,
திருநெல்வேலி மாவட்டம்.

✡✡✡✡✡

நான் சாய்பாபாவின் இந்த ஆலயத்திற்கு நிறைய நாட்கள் வந்திருக்கிறேன். கடந்த சில வாரங்களாகத் தொடர்ந்து வந்து கொண்டு இருக்கிறேன். நிறைய பிரார்த்தனை செய்தேன், வேலை வாய்ப்பு, உடல் நலம், மன அமைதி வேண்டி சில நாட்கள் காலை வேளையில் வந்து தரிசித்தேன். பாபாவின் அருளால் இன்று ஒரு நல்ல வேலைக் கிடைத்து விட்டது. உடல் நலம் பெற்றது. மனமும் அமைதியைப் பெற்றது. இந்த ஆலயத்திற்கு வந்து என்னுள்ளும், வீட்டிலும் நிறைய மாற்றத்தைப் பார்க்கிறேன்.

மக்களின் முறையான கோரிக்கைகள் சீரடி நாதன் நிறைவேற்றி வைப்பார். பொறுமையோடு நம்பி வேண்டுங்கள் நினைத்தது நிறைவேறும்.

ஓம் ஸ்ரீ சாய் ராம்

**ஜெ. சுந்தர்**
32, போலீஸ் ராமசாமி,
நாயக்கன் சந்து,
மேலவீதி, தஞ்சை–7.

✡✡✡✡✡

ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சீரடி சாயிபாபா துணை

30.6.2011

ஒரு மனை விற்பனையாகாமல் இருந்தது. அது எனக்குப் பிரச்சனையாகவும் இருந்தது. இரண்டு மாதமாகப் பாபா சந்நிதிக்கு வந்து வேண்டிக் கொண்டதில் எந்தப் பிரச்சனையும் இல்லாமல் சுமூகமாக மனை விற்கப்பட்டது.

இப்படிக்கு,

**நடராஜன் பால சரஸ்வதி**

234, 4வது தெரு,

நடராஜபுரம் தெற்கு,

மருத்துவக்கல்லூரி சாலை,

தஞ்சாவூர்.

✡✡✡✡✡

ஓம் சத்தியம்

ஓம் சாயி நமோ நமஹ

12.02.2009

சத்குரு சாயிவே, சத்குரு சாயி மாதாவே வணக்கம்.

வணக்கம். வணக்கம். என் ஒரே மகன் அமெரிக்காவில் உள்ளான். இரண்டு வருடமாகியும் அவனால் இங்கு வர முடியாத சூழல் இருந்தது. போனவாரம் வியாழக்கிழமை சாயிமாதா மடியில் என் மகனின் போட்டோவை வைத்து

சத்திய வழிபாடு செய்தேன். மூன்று மாதத்திற்குள் வர வேண்டும் என்று நினைத்த எனக்கு, இந்த வியாழன் (12.02.2009) அன்று பகல் ஆராதனை முடிவதற்குள் என் மகன் பிரபுசங்கர் இந்தியா புறப்பட்டு விட்டதாக நற்செய்தி கிடைத்துவிட்டது. 13.02.2009 அன்று புறப்பட்டு 14.02.2009 அன்று இந்தியா வந்து இறங்கினான். இந்த சத்திய நிகழ்வு, சாயி மாதாவின் சத்திய அருளாகக் கிடைக்கப் பெற்றேன் என்பதைச் சத்தியமான நன்றிப் பெருக்குடன் சாயிமாதாவுக்கு தெரிவித்து, மேலும் என் மகன் வாழ்வு நன்கு சீரும் செல்வாக்கும் பெற வேண்டி நம்பிக்கையுடன் வேண்டிக் கொள்கிறேன்.

சாயி மாதாவே வணக்கம்.

இங்ஙனம்

முனைவர். **ஜெ. சந்தியா சந்திரசேகரன்**

ஓம் சத்தியம் ஜெயம்.

✡✡✡✡✡

Om

# SAI BABA's GRACE

Duty to his grace and blessings my daughter son SHUBHA PRADA was blessed with a girl child on 9.12.2011 at about 7.pm.

The doctor had given 19.12.2011 as the due date for delivery. So we visited this temple in the afternoon on 9.12.2011. The same day we went for doctor check up. The doctor asked us to admit her immediately. The delivery was normal and easy whereas we were worried about the safety of the child, as we had met with an accident on 21.9.2011. Our car had collided with a truck.

So we are greatly indebted to the divine BABA.

Om Sri Sairam.

**K.S.SUNDAR**
Professor, SASTRA
Thanjavur-613 401

ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சீரடி சாய்பாபா துணை

நம்பிக்கை பொறுமை

பாபாவை வேண்டுபவர்களை, பாபா எப்பொழுது எந்நேரத்திலும் கைவிடமாட்டார். என் பெயர் சுரேந்திர குமார். நான் என் அம்மாவின் உடல்நிலை மோசமாகி ஆஸ்பத்திரியில் சேர்த்திருந்தோம். அவருக்கு ஆப்பரேசன் செய்ய வேண்டும் என்று டாக்டர்கள் சொல்லிவிட்டனர். என் அம்மாவுக்கு வயதோ 85 ஆப்பரேசன் அவருக்கு ஒத்து வருமா? என்று சந்தேகமாக இருக்கிறது என்று டாக்டர்கள் கூறினர்.

இதற்காகவே 9 வாரங்கள் விரதம் இருந்து பாபாவை மனதார வேண்டி கொண்டேன். அம்மாவிற்கு ஆப்பரேசன் செய்து நல்லபடியாக வீடு வந்து சேர்ந்துவிட்டார். அதன்பிறகு அம்மா இந்தச் சீரடி பாபா ஆலயத்துக்கு வந்து அன்னதானமும் செய்து பாபாவுடைய தரிசனத்தைப் பெற்று வருகின்றார். பாபாவை மனதார வேண்டுங்கள் பாபா எப்பொழுதும் உங்களை கைவிட மாட்டார்.

**S.K. புவனா**
சீரங்க கொத்த தெரு,
தஞ்சாவூர்.

✡✡✡✡✡

## பாபாவின் மகிமை

05.02.2010

நான் 2002-ம் ஆண்டு வெளிநாடு வேலை வாய்ப்பிற்காக பம்பாய் சென்ற பொழுது வேலை கிடைக்க வேண்டும் என்று நான் கண்களை மூடிக்கொண்டு கடவுளை நினைத்து வேண்டிக் கொண்டிருக்கும் பொழுது கண் திறந்து பார்த்த பொழுது சீரடி பாபா படத்தைக் கண்டு பரவசமடைந்தேன் அவருடைய சாந்தமான முகம் நான் இருக்கிறேன் என்று அசீர்வாதம் செய்யும் போட்டோ கிடைத்தது பின் வேலையும் கிடைத்து துபாய்க்கு ஒரு பெரிய கம்பெனியில் வேலை 2002 முதல் 2006 வரை பணிபுரிந்து ஊருக்குத் திரும்பினேன். பின்னர் 2009ம் ஆண்டு நம் ஊரில் (தஞ்சாவூர்) சீரடி பாபா ஆலயம் இருக்கிறது என்று கேள்வி பட்டு வந்து தரிசித்து கொண்டு இருந்த வேளையில் என்னுடைய வேண்டுதலை ஏற்று பாபா கருணையால் அரசு பணி கிடைத்து அதுவும் என் பிறந்தநாளில் அதில் கோரும் வாய்ப்பை வழங்கிய பாபாவின் மகிமை என் வாழ்நாள் முழுவதும் பாபாவின் அடிமை என்று சொல்வதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்.

நன்றி பாபா.

**D. சரவணக்குமார்**
வாணக்காரத்தெரு,
தஞ்சாவூர்.

✡✡✡✡✡

## சீரடி பாபாவின் 11 உபதேசங்களில் எண் 7ல் உள்ள உபதேசம் சத்தியமான உண்மை.

என்னையே தஞ்சமாக நினைத்து நம்பிக்கையுடன் எவர் அழைக்கிறாரோ அவர் முன் நானோ அல்லது என் வேறு உருவிலோ வந்து சேர செய்வேன்.

**D. சரவணக்குமார்**

✡✡✡✡✡

ஓம் சாய்ராம்

8.9.2010

செம்பனார் கோவில்

நாகை மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா, செம்பனார் கோவில், திலகர் தெருவில் வசிக்கும் S.சிவக்குமார் என்கின்ற நான் M.Com.,M.Phil.,.B.Ed., படித்துள்ளேன். சுமார் இரண்டு வருடங்களுக்கு முன் சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் எனக்கு வேலை வாங்கித் தருவதாகக் கூறி எனது நண்பர் மூலம் ஒருவர் என்னிடம் 11 லட்சம் ரூபாயைப் பெற்றுக்கொண்டார்.

ஒரு சாதாரண நடுத்தர குடும்பத்தில் பிறந்த நான் ஒரு தனியார் மெட்ரிக் பள்ளியில் தான் வேலை பார்த்து வருகிறேன். மேற்கண்ட தொகை முழுவதும் நான் எனது நண்பர்களிடமும் உறவினர்களிடமும் வேலைக்காகக் கடனாக வாங்கி கொடுத்தது ஆகும்.

✡✡✡✡✡

வேலை வாங்கித் தருவதாகப் பணம் வாங்கியவர் 6 மாத காலம் ஆகியும் வேலை வாங்கித் தரவில்லை. எனவே நான் அவரிடம் பணத்தைத் திருப்பிக்கேட்டேன். பலமுறை என்னை அலைக்கழித்த அவர் கடைசியாக ஒரு காசோலையைக் கொடுத்து 20 நாள் கழித்து வங்கியில் போட்டுப் பணம் எடுத்துக்கொள்ள சொன்னார். அவர் கூறியபடி நான் வங்கியில் கலெக்ஷனுக்குப் போட்டபோது வங்கியில் பணம் இல்லை எனத் திரும்பி வந்துவிட்டது.

எனது வக்கீல் மூலம் காசோலை மோசடி வழக்கை மயிலாடுதுறை குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தேன். இப்படி ஒரு இக்கட்டான நிலையில் என்னிடம் மனம் விட்டுப்பேசக்கூடிய எனது நலனில் அக்கரை கொண்ட தஞ்சாவூர் சீனிவாச நகரில் சாய்பாபா கோவில் அருகில் வசிக்கும் எனது உறவினர் இன்ஜினியர் திரு.S.சிவசங்கர் அவர்கள் வீட்டிற்கு எனது மனைவி மற்றும் குழந்தைகளுடன் இரண்டு மாதங்களுக்கு முன்னர் சென்றேன்.

திரு.சிவசங்கர் அவர்களும், என் மீதும் எனது குடும்பத்தின் மீதும் மிகுந்த அன்பும் பாசமும் கொண்ட அவரது மனைவியும் எனது நெருங்கிய உறவினருமாகிய ஆசிரியை திருமதி.சாந்தி அவர்களும் எனது பிரச்சனைகள் அனைத்தையும் முழுவதுமாகக் கேட்டனர்.

அதன் பிறகு என்னிடம் ஸ்ரீ சாய்பாபா அவர்களின் மகிமையை இருவரும் எங்களுக்கு எடுத்துக்கூறி எங்களை

அவர்கள் வீட்டிற்கு அருகில் உள்ள ஸ்ரீ சாய்பாபா கோவிலுக்கு அழைத்துச் சென்று எனது பிரச்சனையைத் தீர்த்து வைக்கும்படி அவர்கள் மனமுருகி வேண்டிக் கொண்டனர். எங்களையும் வேண்டிக் கொள்ளும்படி கூறினர்.

நான் எனது மனைவி மற்றும் குழந்தை பெயரில் சாய்பாபாவிற்கு அர்ச்சனை செய்து அவர் காலில் விழுந்து நமஸ்கரித்து எனது பிரச்சனையைத் தீர்த்து வையுங்கள். என்றென்றும் நான் உங்கள் பக்தனாக இருப்பேன் என்றும் ஷீரடிக்கு நேரில் வந்து தரிசிக்கிறேன் என்றும் வேண்டிக்கொண்டேன்.

கோவிலுக்குள் சென்று பாபாவைத் தரிசித்தவுடன் எனக்கும் முழு நம்பிக்கை ஏற்பட்டது. மேலும் நீயே கதி என பாபாவிடம் சரணடைந்தேன். எனது உறவினர்களின் வார்த்தைகள் எனக்கு நம்பிக்கை ஊட்டின.

வீட்டிற்கு வந்த அடுத்த நாள் வியாழக்கிழமை விரதத்தைத் தொடங்கினேன். 1008 முறை ஸ்ரீ சாய் என்ற மந்திரத்தைப் புத்தகத்தில் எழுதிவந்தேன். ஒரே வாரத்தில் எதிரி என்னிடம் சமாதானத்திற்கு வந்தான். இரண்டே வாரம் வியாழக்கிழமை விரதம் இருந்தேன். 9வது நாள் எதிரி தானாக வந்து 2 லட்சம் ரூபாயைத் திருப்பிக் கொடுத்தார். மீதமுள்ள தொகையை விரைவில் தருவதாகக் கூறினார்.

எதிரி மீது நீதிமன்றத்தில் ஜாமீனில் வெளிவரமுடியாத கைது ஆணை பிறப்பிக்கப்பட்டது. பணத்தைக் கொடுக்கவில்லை என்றால் எதிரியின் அரசு வேலை பறிபோய்விடும் என்கின்ற நிலைக்குத் தள்ளப்பட்டார்.

இறுதியாக நான் விரதம் தொடங்கிய 9வது வார முடிவில் எதிரி நேரடியாகச் சமாதானத்திற்கும் வந்தார். மேலும் 5 லட்சம் ரூபாயை வழங்கினார். மீதமுள்ள தொகையை 15 நாட்களுக்கு ஒரு முறை 1 லட்சம் வீதம் கொடுத்துவிடுவதாகக் கூறி மேலும் 3 காசோலைகளை வழங்கினார். நான் வழக்கை வாபஸ் பெற்றுக்கொண்டேன்.

இப்போது நான் கடன்களை அடைத்து நிம்மதியாகவும், சந்தோஷமாகவும் இருக்கிறேன். இவை அனைத்தும் பாபவின் கருணையினால்தான் நடைபெற்றது என 100% நம்புகிறேன். சென்ற வாரம் மீண்டும் தஞ்சாவூர் வந்து பாபாவை வழிபட்டேன். பாபாவின் படங்களை வாங்கி வீடு முழுவதும் வைத்துள்ளேன். தினம்தோறும் அவரது ஆரத்தி பாடல்களைக் கேட்டு நிம்மதி அடைகிறேன்.

நான் பாபாவை வழிபட துவங்கியது முதல் எனது வாழ்வில் பல மாற்றங்கள் நடைபெற தொடங்கின. தீய எண்ணம் கொண்ட நண்பர்கள் தானாகவே பிரிந்து சென்றனர்.

என்மீது அன்பும் பிரிவும் கொண்ட நண்பர்களும், உறவினர்களும் என்னிடம் மேலும் நெருக்கம் கொண்டு என்னிடம் அன்பு பாராட்டி வருகின்றனர்.

எனது பணத்தேவைகள் முழுமையாக நிறைவேறியது. எனது கஷ்டங்கள் நீங்கின. நான் பணிபுரியும் இடத்தில் எனது மதிப்பு உயர்ந்தது. தெளிவான சிந்தனையுடன் இருக்கிறேன். தீய எண்ணங்கள், பழக்கவழக்கங்கள் முற்றிலும் ஒழிந்தன.

என்னைப் பாபாவிடம் அழைத்து சென்று எனது வாழ்க்கையில் ஒளியேற்றிய, எனது வாழ்வில் புதிய ஒரு அத்தியாயத்தை தொடங்கி வைத்த எனது உறவினர்கள் திரு.சிவசங்கர் & சாந்தி மற்றும் அவர்களது குழந்தைகள், பரத் & ஸ்ரீராம் ஆகியோர் எல்லா நலன்களும் பெற்று மனமகிழ்ச்சியாக வாழ எல்லாம் வல்ல சாய்பாபா அருள் புரிய வேண்டும் என வேண்டி வேண்டுகிறேன். அவர்களது உதவியை நான் என்றென்றும் நன்றியோடு நினைவில் கொள்ளுவேன். அவர்கள் வழிகாட்டுதலில் மேலும் பலர் துயர் நீங்கி வாழ்வில் வளம்பெற வேண்டும் என வேண்டிக் கொள்கிறேன்.

நன்றி! வணக்கம்.
ஓம் ஸ்ரீ சாய் சரணம்.

நன்றியுடன்
**சிவக்குமார்**
2/15, திலகர் தெரு,
செம்பனார்கோயில்.

ஓம் சாய் ராம், ஜெய் ஹனுமான்

## பக்தரின் எண்ணத்தை நிறைவேற்றும் தெய்வம் சாயி பாபா

நான் சாயி பக்தை, ஆகையால் அவரைப் பற்றிப் பேசுவதில் எனக்கு மிகவும் ஆன்ந்தமாக இருக்கும். என் தமயனும் சாயி பாபாவின் தீவிர பக்தன். அவர் எனக்கு ஸ்ரீ சாயி பாபாவின் அற்புதக் கதையைச் சொல்லும் "சாய் சத்சரிதம்" என்னும் அற்புதமான புத்தகத்தை வழங்கினார். அதற்கு அவருக்கும் அவரது மனைவிக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் தினமும் அதில் ஒரு பகுதியைப் படித்து வந்தேன். அப்பொழுது "ஸ்ரீ சாயி பகவான்" அற்புதக் கதையில் அவர் தம் பக்தர்களின் கனவில் தோன்றி அருள் புரிந்த கதையைப் படித்தேன். எனக்கு "ஸ்ரீ சாயி பகவான்" என் கனவிலும் வந்து அருள் செய்ய வேண்டும் என்று ஆசை. ஆகவே நான் அவரிடம் அன்று இரவு பிரார்த்தித்தேன். பிறகு நான் உறங்கச் சென்றேன்.

அடுத்த நாள் காலையில் எழுந்து பார்த்தபோதுதான் ஓர் அற்புதம் நிகழ்ந்தது. இரவு நான் உறங்கிக் கொண்டிருக்கும்போது என்ன நடந்தது என்று நினைவுக்கு வந்தது. "ஸ்ரீ சாயி பகவான்" அவர் பக்தை ஆகிய எனது வேண்டுகோளுக்கு ஏற்றவாறு அன்று இரவே என் கனவில் தோன்றினார்.

## கனவின் காட்சி

"ஸ்ரீ சாயி பாபா" சிற்ப ரூபத்தில் மிக அழகாக வெள்ளை நிறத்தில், அலங்காரத்துடன் என் கனவில் வந்தார். ஒரு சிற்பமல்ல இரண்டு பெரிய மிக அழகான, அற்புதமான சிற்பங்கள். எனக்குச் சீரடி செல்ல வேண்டும் என்ற ஆசை இருந்தது அதை "ஸ்ரீ சாயி பாபாவிடம்" வேண்டியிருக்கிறேன். அதையும் பாபா மனதில் வைத்துக் கொண்டு என் கனவில் இன்னொரு காட்சியையும் அளித்தார். இரண்டு சாயி சிற்பத்துக்கும் நடுவில் ஒரு "பேருந்து" நின்று கொண்டு இருந்தது. அங்கு வரிசையில் மக்கள் நின்றனர், நானும் நின்றேன், அது பயணச்சீட்டு அளிக்கும் வரிசை அதில் சீரடிக்குப் பயணச்சீட்டு வழங்கினார்கள், நான் சீட்டுக்கொடுப்பவரிடம் சீட்டு வாங்கியபின் கேட்டேன், அவர் "ஐப்பசி" மாதம் "சீரடிக்கு" அழைத்துச் செல்லப்போவதாகக் கூறினார்.

ஆஹா என்ன ஓர் அற்புதம் நிகழ்த்தினர் என் தந்தை "சாயி பாபா" அவர்தான் என்னைச் சீரடிக்கு அழைத்து செல்லப் போகிறார் என்று எனக்குத் திடமான நம்பிக்கை இருந்தது. அதேபோல் அவர் என்னை அழைத்துச் சென்று வந்தார்.

"ஸ்ரீ சாயி நாதர்" எனக்கு வாக்கு அளித்ததுபோல, நானும், என் அன்னை திருமதி.மாலா அவர்களும் சீரடிக்குச் சென்றோம். எப்படி என்றால், தொலைக்காட்சியில் விளம்பரம் வந்தது "வசந்த்கமல்" என்ற Tourist Group "பின்" விளம்பரம்

அது, அதில் அக்டோபர் 18-ம் தேதி வியாழக்கிழமை 2012-ம் ஆண்டு சீரடிக்கு ரயில் மூலமாக அழைத்துச் செல்லப்படும் என்று கூறப்பட்டிருந்தது. உடனே பாபாவை வேண்டிக்கொண்டு அந்தத் தொலைபேசிக்கு "Phone" செய்து 2 சீட்டைப் பதிவு செய்யச் சொன்னேன். அவர்களும் பதிவு செய்தனர்.

நானும், என் தாயும் மிக்க மகிழ்ச்சியுடன் "ஸ்ரீ சாயி பாபாவை" சீரடியில் 18.10.2012 அன்று தரிசித்தோம். இதில் குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால் அன்று (18.10.2012) தமிழ் மாதம் "ஐப்பசி" முதல் நாள்.

"ஸ்ரீ சாயி பாபா" எனது கனவில் கூறியவாரே என்னையும், என் அன்னையையும் புண்ணிய ஸ்தலமான சீரடிக்கு அழைத்துச் சென்றார்.

இது என் சொந்த அனுபவம் "ஸ்ரீ சாயி பாபா" அருள் வள்ளல் ஆத்ம ஸ்வரூபர் ஆவார்.

பக்தரின் எண்ணம்போல் அனைத்தையும் நிறைவேற்றும் "ஸ்ரீ சாயி ஹனுமானுக்கு" நன்றி கூறுகிறேன்.

**மாதங்கி**
1496/26/14, பட்சண்ணா சந்து,
மேலவீதி,
தஞ்சாவூர்-613 009.

18.06.2010

என் மகன் பெயர் ரெங்கராஜன், வயது-28 அவர் திருமணம் தடைபட்டுக் கொண்டிருந்தது. ஒருமுறை பாபாவின் ஆத்மசீடர் மாணிக்கம் அவர்கள் வந்த பொழுது எனது மகனுக்குத் திருமணம் ஆகவேண்டும் என்று வேண்டினேன். அவர், பெண்ணின் அடையாளத்துடன் கூறினார். அதன்படியே முடிந்தது எனக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது. சீரடி நாதனின் அருளுக்கு எல்லையே இல்லை.

**லீலாவதி**
விக்னேஸ்வரா நகர்,
பாபா ஆலய மேற்கு புறம்,
தஞ்சாவூர் - 9.

✡✡✡✡✡

ஸ்ரீ ஸ்ரீ சீரடி சாய்பாபாவுக்கு அநேக கோடி நமஸ்காரம்.

சென்றமுறை வேலூர் பாபா உயர்திரு மாணிக்கம் சுவாமிஜி அவர்கள் தஞ்சை ஸ்ரீ சீரடி சாய்பாபா கோவிலில் அவர்களைச் சந்தித்தோம். அவர் கண்களில் ஸ்ரீ சீரடி சாய்பாபா மிக நன்றாகத் தெளிவாகக் காட்சி கொடுத்தார்.

நாங்கள் தஞ்சை மருத்துவக்கல்லூரிச் சாலை பாலாஜி நகரில் K.R.T. ஜீவல்லர்ஸ் என்ற நகை கடை நடத்தி

வருகிறோம். நாங்கள் மிகவும் உயர்ந்த நிலையில் S.R. ஜீவல்லர்ஸ் நகை கடை நடத்தி வந்தோம். மிகவும் சிறப்பாக நடந்து செல்வச் செழிப்போடு வாழ்ந்து வந்தோம். சுமார் 3 ஆண்டுகளாக வியாபாரம் சரிவு ஏற்பட்டு கஷ்ட சூழ்நிலையில் சுவாமிஜியைப் பார்க்க வந்தோம். சுவாமிஜி 21 நாட்களில் தங்களுக்கு நல்ல மாற்றம் கிடைக்கும் என்று அருள் வாக்கு சொன்னார்கள். அதன்படி அவர் சொன்ன நாட்களில் எங்களுக்கு மிகவும் வேண்டியவர் பெருந்தொகை கொடுத்து உதவினார்கள். நானும் எனது சகோதரர் திரு.Dr.K.ராஜேந்திரன் அவர்களின் முயற்சியால் K.R.T. ஜீவல்லர்ஸ் நகை கடையை நடத்தி வருகிறோம். திரும்பவும் மேலும் மேலும் வியாபாரம் செழித்தோங்கி லாபகரமாக வியாபாரம் நடக்க ஸ்ரீ ஸ்ரீ சீரடி சாய் பாபா எங்களுக்குப் பரிபூரண அருள் புரிய வேண்டும்.

இப்படிக்கு
**M. சரோஜா**
7.8.2010

**K.R.T. ஜீவல்லர்ஸ்,**
**4, பாலாஜி காம்ப்ளக்ஸ்,**
**பாலாஜி நகர்,**
**மருத்துவக்கல்லூரிச் சாலை,**
**தஞ்சாவூர்.**

✡✡✡✡✡

ஸ்ரீ ஸ்ரீ சீரடி சாய்பாபா துணை

நானும் என் தங்கை, தங்கை வீட்டுக்காரர் ஆகியோர் சுவாமி மாணிக்கம் அவர்களிடம் நிவாரண பிரார்த்தனையில் கலந்து கொண்டு பிரார்த்தனை செய்தோம்.

நானும் என் அத்தானும் சேர்ந்து கூட்டாக நடத்த ஆரம்பித்த K.R.T. ஜீவல்லர்ஸ் 3 மாதங்களாக சரிவர வியாபாரம் நடக்கவில்லை. அய்யா அவர்களிடம் முறையிட்டோம். உடனடியாக நல்ல முறையில் வியாபாரம் நடைபெறும் கவலை வேண்டாம் என கூறினார்கள்.

எனக்கு என்னுடைய மகன் பிரகாஷ்க்கும் அவர் மனைவி சுகந்திக்குமிடையே ஏதோ மனக்கசப்பால் 10 நாட்களுக்கு முன்பாக என் மருமகனுக்கு 2 நாட்களாக சாமி வந்து ஆடி என் மகனை அடித்தார்கள். மேலும் அவர்களுக்கு திருமணமாகி 11/2 வருடமாகியும் குழந்தை பேறு இல்லை என நான் வேண்டிக் கொண்டேன். அதற்குச் சுவாமிஜி அவர்கள் நீங்கள் எதற்கும் கவலைப்பட வேண்டாம் என்றார் அவர்களுடைய கண்களில் வெண்ணிறமுடைய பாபா தோற்றத்தை நான் கண்டேன். அய்யா அவர்கள் 3 எலுமிச்சை கனிகளைக் கொடுத்து ஒன்றை வீட்டு வாசலிலும், ஒன்றை சுவாமி அறையிலும் மற்றொன்றை அவர்கள் இருவரும் பிழிந்து குடிக்கவும் கொடுத்தார்கள். தன்னிடம் உதியைக் கொடுத்து அவர்கள் இருவரும் பூசவும் தம்பி படுக்கும் படுக்கையில் மட்டும் அவன் மனைவிக்குத்

தெரியாமல் அவன் படுக்கும் முன் உதியை தெளிக்கச் சொன்னார்கள். உடனடியாகக் குழந்தைப் பேறு உண்டாகும் எனவும் கூறினார்கள்.

நான் ஒரு ஓய்வு பெற்ற பேராசிரியர். தற்பொழுது ஒரு சுயநிதிக் கல்லூரியில் முதல்வராக குறைவான ஊதியத்திற்குப் பணியாற்றி வருகிறேன். எனக்கு பல பிரச்சனைகள் உள்ளன. அவற்றை சுவாமி பாபாஜி அவர்கள் தீர்த்து வைக்க பிரார்த்தித்தேன்.

என் சின்ன மகன் MS.IT., முடித்துவிட்டு 2 வருடமாக வேலையில்லாமல் இருந்து தற்பொழுது ஒரு சாஃப்ட்வேர் கம்பெனியில் ரூ.10,000க்கு வேலை பார்த்து வருகிறான். அவனுக்கு வெளிநாடு யோகம் கிடைக்கவும் நிறைய சம்பாதிக்கவும் பிரார்த்தனை செய்தேன்.

என் பெரிய மகன் RPS மெடிக்கல்ஸ் என்ற நிறுவனத்தை ஆரம்பித்து அவன் மனைவியோடு வியாபாரம் செய்து வருகிறான். அவனது தொழிலும் நன்கு மேன்மேலும் வளர்ந்து பெரிய தொழிலதிபராக வேண்டும் என பிரார்த்தனை செய்தேன்.

என் மனைவிக்கு Sugar, Pressure Complaint இருந்து வருகிறது. அவ்வியாதியிலிருந்து அவள் மீண்டு சௌகரியமாக சுமங்கலியாக 100 ஆண்டுகள் வாழ வேண்டும் எனவும் பிரார்த்தனை செய்தேன்.

எனது மகள் ஒரு Software Engineer-க்குத் திருமணம் செய்து வைத்தேன். அவர் அவரது அம்மா பேச்சைக் கேட்டுக்கொண்டு என் மகளோடு சண்டை சச்சரவு செய்து வருகிறார். அவரும் மகனும் திருந்தி என் மகளோடு ஆசை அன்பாக வாழ வேண்டும் எனவும் பிரார்த்தனை செய்தேன்.

என் மகள் வைத்து பேரன் நிகில் பேத்தி நேத்ரா ஆகியோர் எவ்வித நோய் நொடியும் இன்றி நன்றாகப் படித்து உயர் பதவியில் பதவி பெற்று நீண்ட காலம் வாழ வேண்டும் எனவும் பிரார்த்தனை செய்தேன். பலன் கிட்டும் என்ற நம்பிக்கையில் இருக்கின்றேன்.

**Dr.K. ராஜேந்திரன்**
தஞ்சாவூர்
18.6.2010

நானும், என் பெற்றோர், தம்பி அனைவரும் சீரடி சாய்பாபாவின் தீவிர பக்தர்கள். நான் B.Tech., Mechanical Engineer படித்துவிட்டு, பாபாவிடம் எனக்கு வேலை வேண்டி பிரார்த்தனை செய்தேன். எனது பிரார்த்தனையைப் பாபா ஏற்று எனக்கு L&T-யில் வேலை கிடைத்து உள்ளது. கர்நாடகாவில் பணி புரிகிறேன். பாபா அவர்கள் எப்பொழுதும் எங்களுடனே இருக்கிறார்.

**S. வெங்கடசுப்ரமணியன்**
த/பெ. P. சீனிவாசன்
1969/2B கீழவண்டிக்காரத் தெரு
தஞ்சாவூர்-1.
18.06.2010

✡✡✡✡✡

நான் இரண்டு வருடங்களுக்கு முன்பு தான் ஸ்ரீ சாயி பாபா கோவிலுக்கு முதன் முதலாக வந்தேன். அன்று கோயில் நடை பூட்டியிருந்தது. ஆனால் நான் பாபாவைத் தரிசித்த பிறகு தான் வருவேன் என்று பிடிவாதமாக வீடு திரும்ப மறுத்து விட்டேன். பிறகு பாபாவைத் தரிசித்த பிறகுதான் வீடு திரும்பினேன். அன்றிலிருந்து ஒவ்வொரு வியாழக்கிழமையும் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறேன். 2009-ம் வருடம் ஒரு நாள் பாபா சாயி மாணிக்கம் பாபா அவர்கள் வருவதாக தகவல் கிடைத்தது. பாபா அவர்களைத் தரிசித்தேன் பாபாவின் கண்ணில் சீரடி பாபாவைத் தரிசித்தேன். அப்பொழுது என் கணவர் வேலை இல்லாமல் இருந்தார். என் கணவருக்கு வேலை வேண்டும் என்று வேண்டியிருந்தேன். அதே போல்

என் கணவருக்கு வேலை கிடைத்தது. மறுபடியும் 2010-ம் வருடம் மாணிக்கம் பாபா வருவதைத் தெரிந்து பாபாவைத் தரிசிக்க வந்தேன். இப்பொழுது என் பிள்ளைகளுக்கு நல்ல கல்வி வேண்டும் என்று வேண்டியிருக்கிறேன். பாபா என் வேண்டுதல்களை நிறைவேற்றுவார் என்று முழு நம்பிக்கையுடன் காத்திருப்பேன்.

என்றென்றும்
பாபாவின் உண்மையான பக்தை,
**L. ஹெமல்டாமேரி**
664/35B கொள்ளுப்பேட்டைத் தெரு
கீழவாசல், தஞ்சாவூர்.

✡✡✡✡✡

நான் தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணியைச் சேர்ந்தவன். எனக்கு இரு பெண் குழந்தைகள், ஒரு பையன் எனது மகன் க.ம.திருவின் மேல்நிலை இரண்டாம் ஆண்டு படித்து வருகிறான்.

எங்களது இரு பெண்களுக்கும் சென்ற ஆண்டு ஒரே நேரத்தில் திருமணம் பாபாவின் ஆசீர்வாதத்தால் நடந்தது. என் இளைய மகளுக்கு 31.3.2014-ல் சென்னையில் பெண் குழந்தை பிறந்து நலமாக உள்ளது. எங்களது பேத்திக்குச் சாய் நந்தினி என்று பெயர் வைத்துள்ளோம்.

எங்களது மூத்த மகள் க.ம.கோப்பெருந்தேவி ரா.சரவணனுக்கு 18.6.2014-ல் காலை 7.26-க்கு அழகிய

ஆண் குழுந்தை பிறந்தது. ஆனால் குழந்தை பிறந்த பேராவூரணியில் போதிய மருத்துவ வசதி இல்லாததாலும் எங்களது மகனுக்கு மருத்துவம் பார்த்த டாக்டரின் கவனக்குறைவாலும் எங்களது பேரனுக்கு அன்று மதியமே உடல்நிலை சரியில்லாதால் தஞ்சாவூரில் உள்ள புகழ்பெற்ற மருத்துவமனையில் சேர்த்தோம். Dr.ராஜேஸ்வரியும், Dr.கிருத்திகாவும் குழந்தையைக் கவனித்தனர். எங்கள் குடும்பம் வேதாத்திரி மகரிஷியின் அன்பு இல்லக்குடும்பம். சீரடி சாய்பாபாவின் விசுவாசக் குடும்பம்.

இந்த இக்கட்டான சூழ்நிலையில் குடந்தையில் உள்ள சாய்பாபாவின் தொண்டர் திரு. சாய் சொக்கலிங்கம் அவர்களிடம் தொடர்பு கொண்டு நடந்ததைக் கூறி எங்கள் பெயரனைக் காப்பாற்றப் பிரார்த்திக்கிறோம். அவரும் பிரார்த்தனை செய்வதாகக் கூறினார். தஞ்சாவூரில் சீனிவாசபுரத்தில் உள்ள சாய்பாபா கோவிலுக்குச் சென்று பிரார்த்தனை செய்யக்கூறியதுடன் அறக்கட்டளை நிர்வாகி அவர்களுக்கும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு எங்களது பெயரனைக் காப்பாற்ற பிரார்த்தனை செய்ய வேண்டினோம்.

அன்று முதல் தினமும் எனது குடும்பத்தில் உள்ளவர்கள் அனைவரும் சனி, ஞாயிறு இரு தினங்கள் விடாமல் சீனிவாசபுரத்தில் உள்ள சாய்பாபா கோயிலுக்குச் சென்று மன்றாடி வேண்டி நின்றோம். தினமும் ஒருவர் சீனிவாசபுர சாய்பாபா கோவிலுக்குச் சென்று அங்கு

கொடுத்த விபூதியை வாங்கி பெயரன் தலைமாட்டில் வைத்தோம்.

நான் ஒரு முறை சீரடிக்கே சென்று பாபா சன்னிதானத்துக்கு சென்று வந்ததால் அந்த நினைவோடு நான் சீரடியில் இருந்து பிரார்த்தனை செய்வதாகவே நினைத்து தினமும் அழுது வேண்டி வந்தோம். தஞ்சாவூரில் சீனிவாசபுர பாபா கோயில் வேப்ப மரத்தடியிலும், பாபா முகப்பில் உள்ள இடத்திலும் பிரார்த்தனை செய்தோம்.

18.6.2014 முதல் ஏறத்தாழ 20 நாட்கள் Vendilator-ல் இருந்து எங்களது பேரனுக்குச் சீரடி சாய்பாபாவே நேரடியாக வந்து உயிர் தந்தது போல உணர்ந்தோம். மேலும் எங்களது வேதாத்திரி மகரிஷி அறக்கட்டளையைச் சேர்ந்த பேராசிரியர்கள் சித்தர் சமாதி நிர்வாகிகள் மற்றும் சீனிவாசபுர கோயில் தலைவர் இக்கடிதம் எழுதும்வரை நாங்கள் அவரை நேரில் சந்திக்க முடியாவிட்டாலும் எங்களது குறையைப் போனில் கூறிய உடன் இன்று வரை எங்களது பெயரன் சாய் நாராயணன் என்ற சாய் சஞ்சீவிக்காகப் பிரார்த்தனை செய்து வருகிறார்கள்.

எங்கள் பெயரைக் காப்பாற்ற உதவிய அனைத்து சாய் உள்ளங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக அறக்கட்டளைத் தலைவர் திரு. சாய் K.B.சுவாமிநாதன் மற்றும் செயலாளர் பாலசுந்தரம் அவர்களுக்கு நன்றிக்கடன் பட்டுள்ளோம்.

மீண்டும் எங்கள் பெயரன் சாய் நாராயணன் என்ற சாய் சஞ்சீவிக்கு பிரார்த்தனை செய்வதோடு எங்கள் அன்பு மகன் +2 தேர்வில் நல்ல மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெற்று புகழ்பெற்ற கல்லூரியில் சேர பிரார்த்திக்க வேண்டுகிறோம்.

தங்கள் உண்மையுள்ள
**க. மதிவாணன் கிருஷ்ணவேணி**
269/5, நடேசன் காலனி
புது ரோடு, பேராவூரணி-614 804
தஞ்சாவூர் மாவட்டம்.

✡✡✡✡✡

07.08.2010 அன்று தஞ்சை, ஸ்ரீ சீரடி சாயிபாபா ஆலயத்தில், வேலூர் பாபா சாயி மாணிக்கம் மூலம் நடைபெற்ற இலவச பிரார்த்தனை முகாமில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு, பிரார்த்தனையின் பொழுது, பாபா சாயி மாணிக்கம் கண்களில் சீரடி சாயிபாபா தெரிந்துள்ளதனைப் பதிவு செய்துள்ளார்கள். பிரார்த்தனையின் போது பாபா வெள்ளை நிறத்தில் அவர் கண்களில் தெரிந்தார்.

**K.லதா**
97/4, யாகப்பா நகர்,
தஞ்சாவூர்.

வேலூர் பாபா சாயி மாணிக்கம் அவர்களின் கண்களில் சீரடிபாபாவின் தோற்றத்தைக் கண்டதாக, பல பக்தர்கள் பதிவு செய்துள்ளனர்.

**அழைத்து வந்தார்**

நான் அம்மன்பேட்டை என்னும் சிற்றூரில் வாழ்ந்து வருகின்றேன். எனக்குப் பிறந்த மகள், மனக்கோளாறு நோயால் இறந்துவிட்டாள் (வயது 9 – பெயர் –விஜயலெட்சுமி) மகள் இறந்த துக்கத்தில் பல ஆண்டுகள் ஓடின என்றாலும் கவலைபாரம் இறங்கவில்லை அதனால் பல நாட்கள் கண்கள் உறங்கவில்லை.

30.12.2010 அன்று அம்மன்பேட்டை பஸ்ஸ்டாண்டில் தஞ்சைக்கு வர அமர்ந்திருந்தேன். ஒரு பெரியவர், நல்ல முரட்டு மீசை வேட்டி, ஜிப்பா அணிந்தவர் என்னிடம் வந்து, என் கூடவா, உன்னை எங்கு சேர்க்க வேண்டுமோ அங்கே உன்னைச் சேர்க்கிறேன் வா இனி நிம்மதி உனக்கும் கிடைக்கும் என்றார். அதுநாள் வரை பாபாகோவில் இருக்குமிடம் எனக்குத் தெரியாது வந்ததுமில்லை. என்னை அழைத்து வந்தவர் பாபா கோயில் வாசலில் அமர வைத்து உள்ளே சென்று தண்ணீர் எடுத்துவந்து கொடுத்தார் நானும் வாங்கிக் குடித்தேன்.

கோயிலில் வழிபட்டுவிட்டு வெளிப்பகுதியில் செருப்பு பாதுகாக்கும் இடத்தில் அமர்ந்தேன். செருப்பைப் பாதுகாக்கும் பணியில் இருக்கும் K.ரெங்கசாமி யாதவ், தாகமாய் இருக்கும் இந்தா தண்ணீர் குடி என்றார். என்னை

அழைத்து வந்தவரும் அவர்தான் என்று எண்ண நான் இப்போதுதானே உங்களிடம் இருந்து தண்ணீர் வாங்கிக் குடித்தேன் என்றேன். உன்னை நான் முன்னே பின்னே பார்த்தது இல்லையே எத்தனையோ பேர் வருகிறார்கள், போகிறார்கள் என்றார்.

என்னை அழைத்து வந்தவர் சீரடி சாய் நாதனே என்று உணர்ந்தேன். அன்றிலிருந்து அவருக்குப் பணி செய்வதையே வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றேன்.

"யாமிருக்க பயமேன்"
சீரடி சாய்

திருமதி. K.இராதா
சீரடிக்கோயில் பணியாளர்
தஞ்சாவூர்.
30.12.2010

✡✡✡✡✡

ஒருநாள் (27.5.2007) நண்பகல் வேளையில் கோயில் துப்புரவு பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தேன். நான் பணிசெய்த இடத்தில் தூய வெள்ளாடையில் வந்த சீரடிபாபா, உள்ளே போ (சன்னிதானத்திற்கு - பழைய கோயில்) என்று சொல்லி நேரே சென்று கருவறை சிலையோடு கலந்துவிட்டார். என்னை ஏன் போகச் சொன்னார் என்று புரியாமல், அபிஷேகம் செய்த பாலோடு சந்நிதானம் சென்றேன். அங்கு ஒரு பெண் (வயது முப்பத்தைந்து இருக்கும்) கண்ணீர் விட்டு அழுது கொண்டிருந்தார். அபிஷேகம் செய்த பாலை அம்மையாருக்குக் கொஞ்சம் கொடுத்தேன். அவரும் வாங்கிக் குடித்தார். ஒரு வாரம் கழித்து என்னை வந்து சந்தித்து, அன்று மிகுந்த துயரத்தோடு வந்து அழுதேன். அபிஷேகப் பாலைப் பருகிய நாளிலிருந்து துன்பங்கள் விலகின என்று மகிழ்வுடன் கூறியது சீரடி நாதனின் அற்புதமாகும்.

என்னைச் சன்னிதானத்திற்கு ஏன் போகச் சொன்னார் என்று தெரிந்து கொண்டேன். அந்தப்பெண் அழுத நேரம் கோயில் அர்ச்சகர் பாலாஜி என்பவர் சந்நிதானத்தில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. பக்தர்களைக் காக்க வைப்பது சீரடி நாதனுக்குப் பிடிக்காது என்பதைப் புரிந்து கொண்டேன்.

திருமதி. **N.கண்ணன்**

சீரடிக்கோயில் பணியாளர்

தஞ்சாவூர்.